# <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.26**.11.2025

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 26.11.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | வேதாத்ரி | இனம் | ஆண் |
| க/பெ. | | தாமோதர ராவ் | ஊர்/வட்டம் | கத்தாரிகுப்பம் |
| வயது | | 61/2025 | தொழில் | சுயதொழில் |

துவக்க நேரம் 12.16 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

**1. நான் தாக்கல் செய்துள்ள எழுத்துமூல சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்துப்பார்த்துதான் இதில் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். இந்த எழுத்துமூல சாட்சியத்தில் நான் வசிக்கும் வீட்டின் கதவு எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. என்னுடைய பிறந்த ஊர் எதுவென்றால், அனந்தபூர், ஆந்திர மாநிலம், அது என்னுடைய தாயாரின் சொந்த ஊர்.**

**2. நான் படித்து வளர்ந்த ஊர் எதுவென்றால் சென்னை. தற்பொழுதும் நான் சென்னையில்தான் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். நான் பிறந்ததிலிருந்து எனது பெற்றோருடன்தான் வசித்து வருகிறேன் என்றால், சரிதான்.**

**3. நான் தாக்கல் செய்துள்ள தான செட்டில்மென்ட் பத்திரத்தில் (பி.வா.சா.ஆ.2) கண்டுள்ள முகவரியில் எத்தனை வருடங்கள் வசித்து வந்தேன் என்றால், சுமார் 40 ஆண்டுகள் வசித்து வந்தேன். என்னிடம்**

காட்டப்படும் பொது அதிகார பத்திரம் (வா.சா.ஆ.3) நான், 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் சென்னை விலசம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், சரிதான், நான் தற்பொழுது வசிக்கும் விலாசத்தை கொடுத்துள்ளேன்.

4. 2ம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால், அவர் என்னுடைய நண்பர். இந்த பொது அதிகார பத்திரம் எழுதுவதற்கு முன்பு எத்தனை வருடங்கள் எனக்கு அவர் பழக்கம் என்றால், 3 ஆண்டுகள் பழக்கம். பொது அதிகார பத்திரத்தை என்ன காரணத்திற்காக எழுதிகொடுத்தேன் என்றால், என்னால் இந்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை சரிவர பராமரிக்க முடியாததால், அவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன்.

5. என்னால் சொத்தை சரிவர பராமரிக்க முடியாததால் நான் பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்தேன் என்று இந்த பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை. நான் இந்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்து கொடுக்கத்தான் அவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்தேன் என்றால், சரிதான்.

6. 2ம் பிரதிவாதி நிலத்தரகராக தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதி நிலத்தரகர் என்றால், சார்பதிவாளர் அலுவலகத்தில் செல்வாக்குள்ளவர் என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்துதான் நான் என்னுடைய எழுத்துமூல சாட்சியத்தை தாக்கல் செய்கிறேன் என்றால், சரிதான்.

7. 2ம் பிரதிவாதிக்கு வழக்கு விவரங்கள் சரியாக தெரியாது என்பதால் நான் அவருக்கும் சேர்த்து எழுத்துமூல சாட்சியம் தாக்கல் செய்கிறேன் என்றால், சரியல்ல. அவருக்கும் வழக்கு விவரம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2ல் நாற்புற எல்லைகளை குறிப்பிட்டு

ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால், இல்லை. சர்வே எண்.114/1ல் உள்ள சொத்து முழுவதும் என எழுதப்பட்டுள்ளது.

8. நானும் எனது தந்தையாரும் வெளியூரில் வசிப்பதால் வழக்கு சொத்தின் நாற்புற எல்லைகள் தெரியாததால், சர்வே எண் மட்டும் குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.2 எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த சொத்தின் முழு விவரம் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. சொத்தின் விவரம் எனக்கு தெரியும்.

9. நான் எனது எழுத்துமூல சாட்சியத்தில், முனுசாமி என்பவர் பாஸ்கரராவ் என்பவரிடம் ஒரு சொத்தை கிரையம் பெற்தாக நான் சொல்கிறேன் என்றால், சரிதான். இந்த சொத்தான் தாவா சொத்து என்றால், சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையிலும், சட்ட அறிவிப்பிலும் முனுசாமி என்பவர், பாஸ்கரராவ் என்பவரிடம் ஒரு சொத்தை கிரையம் பெறவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

10. வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்றால், இந்த தாவா சொத்து வாதிக்கு சொந்தமானதென சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1ம் வாதியை எனக்கு தெரியுமா என்றால், பார்த்துள்ளேன். நான் 1ம் வாதியை முதன்முதலாக எப்பொழுது பார்த்தேன் என்றால், கடந்த 2015ம் ஆண்டு நிலத்தை அளவீடு செய்ய வந்தபொழுது பார்த்தேன். சாட்சி மீண்டும் கடந்த 2014ம் ஆண்டு பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறார்.

11. 1ம் வாதியின் தந்தை பெயர் தெரியுமா என்றால், தெரியாது. ஆனால், பத்திரத்தில் சுப்பாரெட்டி என்று உள்ளது. 1ம் வாதியின் பூர்வீகம் கத்தாரிகுப்பம் இல்லை என்றாலும், லாலாபேட்டை தான் பூர்வீகம் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

12. தாவா சொத்து பாஸ்கரராவ்க்கு உரிமையான சொத்து என்றால், இல்லை. எனது பெயரும், எனது தாத்தா பெயரும் வேதாத்ரி என்றால், என் பெயர் வேதாத்ரிதான், எனது தாத்தா பெயர் வேதாத்ரி ராவ். நான் தாக்கல் செய்துள்ள தான செட்டில்மென்ட் பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள என்னுடைய தகப்பனாரின் பான் கார்டில் எனது தாத்தா பெயர் திருப்பத்தூர் வேதாத்ரி ராவ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

13. நான் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள எனது தாத்தா பெயருக்கும், எனது தகப்பனாரின் பான் கார்டில் உள்ள எனது அப்பாவின் பெயருக்கும் வேறுபாடு உள்ளது என்றால், சரியல்ல. எனது தாத்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால், இருவர், ஒருவர் பாஸ்கரராவ் மற்றொருவர் தாமோதரராவ்.

14. வேதாத்ரி ராவ் என்பவருக்கு பாஸ்கரராவ், தாமோதரராவ் ஆகியோர் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.வேதாத்ரி ராவ் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எந்த வருடம் வேதாத்ரி ராவ் இறந்தார் என்றும் நான் குறிப்பிட்டு சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். எனது தாத்தா வேதாத்ரி ராவ் எந்த ஆண்டு இறந்தார் என்று சொல்ல முடியுமா என்றால், எனது பாட்டி என்னிடம், எனது தந்தை 10 வயதாக இருக்கும்பொழுது எனது தாத்தா வேதாத்ரி ராவ் கடந்த 1940ம் ஆண்டு இறந்ததாக என்னிடம் சொன்னார். எனது தாத்தா இறக்கும்பொழுது எந்த ஊரில் வசித்து வந்தார் என்றால், சென்னையில் வசித்து வந்தார்.

15. தாவா சொத்தை தாமோதரராவ் மற்றும் பாஸ்கரராவ் இருவரும் கூட்டாக அனுபவித்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. தாவா சொத்து எனது தாத்தா வேதாத்ரி ராவ்

என்பவருக்கு சொந்தமான சொத்து என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

16. தாவா சொத்து தாமோதரராவ்க்கும், பாஸ்கரராவ்க்கும் இடையே எப்பொழுது வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால், சரியான தேதி தெரியவில்லை, எந்த வருடம் ஏற்பட்டது என்றும் தெரியவில்லை, அப்பொழுது நான் சிறுபிள்ளையாக இருந்தேன். எனது தாத்தா பெயரில் தாவா சொத்துக்கான உரிமைமூல ஆவணம் இல்லை என்றாலும், தாமோதரராவ்க்கும், பாஸ்கரராவ்க்கும் இடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டது என நான் பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

17. எனது தந்தை பெயரில் எப்பொழுது பட்டா வழங்கப்பட்டது என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்து தொடர்பான அசல் பட்டா புத்தகம் என்னிடம் உள்ளதா என்றால், உள்ளது, அதனை நான் தாக்கல் செய்யவில்லை. நான் எதனால் அந்த பட்டா புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், அது 1996ம் ஆண்டு புத்தகம் அதனால் தாக்கல் செய்யவில்லை.

ஆவணங்களை பரிசீலிக்க வேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக் வேண்டப்பட்டது. வேண்டுகோளை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 01.25 P.M.

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.